# தமிழ்நாடு தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை
## தடையின்மைச் சான்று

**எண்: 31/2026** வில்லிவாக்கம் தீயணைப்பு-மீட்புப்பணிகள் நிலையம்.

**ந.க.எண்: 165/V/வில்லி/2026** **நாள்: 21.07.2026**

பொருள்: தீயணைப்பு-மீட்புப்பணித்துறை – வில்லிவாக்கம் தீயணைப்பு – மீட்புப்பணி நிலையம் – பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட தடையின்மைச் சான்று வழங்குதல் - குறித்து.

பார்வை: 1.அரசு ஆணை எண்.122, பள்ளி கல்வி (2) துறை, நாள்.14.09.2004
2.அரசு ஆணை எண்.122, பள்ளி கல்வி (2) துறை, நாள்.14.09.2004.
3.**THE PRINCIPAL .** என்பவிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பம், நாள்.20.07.2026.

--------------

பார்வையில் காணும் அரசாணைகள் மற்றும் விண்ணபத்தின்படி கதவு இலக்கம் **PLOT NO.C, KONNUR HOGH ROAD & DUNCAN ROAD, AYANAVARAM RAILWAY COLONY, AYANAVARAM, CHENNAI - 600 023,** என்ற முகவரியில் கட்டப்பட்டுள்ள **VELAMMAL VIDYALAYA,** என்ற பள்ளியினை 21.07.2026 அன்று வில்லிவாக்கம் நிலைய அலுவலர் திரு.ஆ.ராமசந்திரன் என்பவரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்விடத்தில் பள்ளிக்கூடத்திற்கு அங்கீகாரம் வழங்கிட கீழ்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு **(21.07.2026 முதல் 20.07.2027 முடிய)** தீயணைப்பு மற்றும் மீட்புப்பணி நோக்கிலிருந்து யாதொரு தடையும் இல்லை.

## நிபந்தனைகள்

1. இத்தடையின்மைச்சான்று **ஓராண்டுக்கு** மட்டுமே செல்லத்தக்கதாகும்.
2. போதுமான தீயணைப்பு கருவிகள் IS 2190:2010 ன்படி பொருத்தப்பட வேண்டும். இந்திய தரநிர்ணய சான்றுடன் தீயணைப்பான்களை கண்ணுக்கு முதன்மையாக கவரும் வகையில் பள்ளியின் ஒவ்வொரு பகுதியிலும் நிறுவ வேண்டும்.
3. முதலுதவி சாதனங்கள் உரிய மருந்துகளுடன் உடனடியாக கிடைக்கும் வகையில் பள்ளிகளில் வைக்கப்பட்டிருக்க வேண்டும்.
4. எல்.கே.ஜி. மற்றும் யு.கே.ஜி பிள்ளைகளுக்கான வகுப்பறைகள் தரைத்தளத்தில் மட்டும் நடைபெற வேண்டும்.
5. அவசர காலத்தில் பயன்படுத்த கூடிய தொலைபேசி எண்கள் மற்றும் தொடர்புகொள்ள வேண்டிய அலுவலர்களின் பட்டியல் ஒன்றை பள்ளியின் அறிப்பு பலகையில் ஒட்டுவதுடன் கேந்திரமான அனைத்து பகுதிளிலும் தெளிவாக தெரியும் வகையில் அமைக்க வேண்டும்.
6. பழைய மின்கம்பிகள் மற்றும் சாகனங்களை அகற்றப்பட்டு இந்திய தரநிர்ணய சான்றுடன் புதிய மின் அமைப்புகள் நிறுவப்பட வேண்டும்.
7. அதிக மின்அழுத்தம் கொண்ட மின்கம்பிகள் பள்ளியின் உள்ளோ அதன் அருகாமையிலோ செல்ல கூடாது. எவையேனும் இருப்பின் அவைகளை உடனடியாக அப்புறப்படுத்தப்படவேண்டும்.
8. ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 14-ம் தேதியை தீ பாதுகாப்பு நாளாக ஒவ்வெரு பள்ளியிலும் அனுசரிக்கப்பட்டு அன்றைய தினம் தீ விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் தீ பாதுகாப்பு பயிற்சிகளை தீயணைப்பு-மீட்புப்பணி குழுவினருடன் இணைந்து நடத்த வேண்டும்.
9. அனைத்து தளங்களிலும் அவசரகாலங்களில் விரைவாக வெளியேறும் வகையில் அவசரகால வழி அமைத்திட வேண்டும்.
10. 45 மாணவர்களுக்கு மேல் உள்ள வகுப்பறைகளுக்கு குறைந்தபட்சம் இருவழி கதவுகள் அமைக்கப் படவேண்டும்
11. அனைத்து கதவுளும் வெளிப்புறமாக திறக்கும் வகையில் அமைக்கப்படவேண்டும்
12. கேஸ் பைப் லைன் படிக்கட்டுகள் ஒட்டி அமைக்கக் கூடாது.

13. படிக்கட்டுகளின் அகலம் குறைந்தப்பட்சம் 30cm, உயரம் 15cm, இருக்க வேண்டும்.
14. மாடிப்படிகள் மற்றும் வெளியேறும் வழிகளில் உள்ள விளக்குகள் தனிமின்சுற்றுடன் அமைக்கப்படவேண்டும்.
15. Miniature Circuit Breakers/Earth Leakage Circuit Breakers நிறுவப்படவேண்டும்.
16. உரிய பாதுகாப்பு முறையுடன் கட்டிடத்தில் இடிதாங்கி நிறுவப்படவேண்டும்.

அரசு விதிமீறல்கள் மற்றும் மேற்குறிப்பட்டுள்ள நிபந்கனைகள் பூர்த்தி செய்யப்படவில்லை எனில் வழங்கபபட்ட தடையின்மைச்சான்று தானாக ரத்தாகிவிடும் என தெரிவிக்கப்படுகிறது.

நிலைய அலுவலர்
தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் நிலையம்
வில்லிவாக்கம், சென்னை-600 049.

<u>பெறுநர்:</u>

**THE PRINCIPAL,**
**VELAMMAL VIDYALAYA,**
**PLOT NO.C, KONNUR HOGH ROAD & DUNCAN ROAD,**
**AYANAVARAM RAILWAY COLONY,**
**AYANAVARAM, CHENNAI - 600 023.**

நகல்: மாவட்ட அலுவலர், மத்தியசென்னை மாவட்டம்.